பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**27 06 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறை முக்கிய பங்காற்றி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**2.** பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை **11** மணிக்கு ஒலிபரப்பாகிறது.

**3.** நாடுமுழுவதும் **500** நகரங்களில் கூட்டுறவு டாக்ஸிகள் இயக்கப்படும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

**4.** பிரிட்டனில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றுவதற்கான புதிய குடியேற்ற சட்டம் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**5.** இலங்கை ''ஏ'' அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா ''ஏ'' அணி இரண்டாவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி **48** ரன் எடுத்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறை முக்கிய பங்காற்றி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்கள் தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், நாட்டின் ஏற்றுமதியில் 50 சதவீதத்திற்கும் மேல் இத்துறையின் பங்களிப்பு உள்ளதாக கூறினார்.

தொழில் முனைவோர்கள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, உற்பத்தியை அதிகரித்து தரமான பொருட்களை தயாரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு ஜித்தன் ராம் மாஞ்சி, இத்துறைக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறைக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் கூறினார்.

<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>>>

நாடுமுழுவதும் 500 நகரங்களில் கூட்டுறவு டாக்ஸிகள் இயக்கப்படும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் பாரத் கூட்டுறவு டாக்ஸி திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், அடுத்த இரண்டாண்டுகளில் இது விரிவாக்கம் செய்யப்படும் என்று கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ், கார் ஓட்டுநர்களும், பயணிகளும் பயனடைவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

பல்வேறு செயலிகள் வாயிலாக கார் பதிவு செய்வதன் மூலம், ஓட்டுநர்கள் செயலி நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாரத் கூட்டுறவு டாக்ஸி திட்டம் மூலம், ஓட்டுநர்கள் எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்று அவர் தெரிவித்தார்.

அமுல் கூட்டுறவு சங்கம் வெற்றியடைந்தது போல், பாரத் கூட்டுறவு டாக்ஸியும் வெற்றியடையும் என்று நம்புவதாக திரு. அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>>

மகாராஷ்ட்ராவில் நாளை நடைபெறவிருந்த ஆசிரியர் தகுதி தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள் வெளியானதையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மகாராஷ்ட்ரா மாநில தேர்வுகள் இயக்கம் அறிவித்துள்ளது.

தானே மாவட்டம் **Bhiwandi** பகுதியில் வினாத்தாள் வெளியானதாக தகவல் வந்ததையடுத்து, காவல்துறையினர் அங்கு சோதனை மேற்கொண்டனர்.

இதுதொடர்பாக, வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒத்திவைக்கப்பட்ட ஆசிரியர் தகுதி தேர்வு தேதி இணையதளத்தில் அறிவிக்கப்படும் என்று மகாராஷ்ட்ரா மாநில தேர்வுகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>>

உலக சுற்றுப்பயணத்தின் ஒருபகுதியாக இந்திய கடற்படையின் பாய்மர பயிற்சி கப்பல் **INS Sudarshini** அமெரிக்காவின் **Baltimore** துறைமுகம் வந்தடைந்தது.

இந்தியாவின் கடல்சார் பாரம்பரியத்தையும், இருநாட்டு கடற்படைகளுக்கு இடையேயான நட்புணர்வுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

அமெரிக்காவின் **250-**ஆவது ஆண்டு நிறுவன விழாவையொட்டி மேரி லேண்ட் — **Baltimore-**ல் நடைபெறவுள்ள விழாவில், இந்திய கடற்படை வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

முன்னதாக, வெர்ஜினியாவில் நடைபெற்ற விழாவிலும் **INS Sudarshini** கலந்துகொண்டுள்ளது.

கேரளம் மாநிலம் கொச்சியிலிருந்து, அமெரிக்காவின் **Norfolk** வரை ஐந்து மாதம் பயணித்து சென்றடைந்தது.

வசு தெய்வ குடும்பகம் என்ற அடிப்படையில் இந்தியாவின் கடல்சார் வலிமையை எடுத்துக்காட்டுவதற்காக இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

இந்திய கடற்படை கப்பல்கள் **INS** உதயகிரி, கவரத்தி, சக்தி, தாய்லாந்தின் **Sattahip** துறைமுகத்துக்கு சென்றடைந்தன.

இதுதொடர்பாக, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தாய்லாந்துடன் கடல்சார் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறியுள்ளது.

தென் கிழக்காசிய நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்த கப்பல்கள் அங்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாட்டு கடற்படையினர் ஒத்துழைத்து செயல்படுவதற்கு இந்த பயணம் வழிவகை செய்யும்.

<<<<<>>>>>>>

பிரிட்டனில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றுவதற்கான புதிய குடியேற்ற சட்டம் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு உள்துறை செயலர் **Shabana Mahmood,** மனித உரிமை சட்டங்களை முறைகேடாக பயன்படுத்தி, அந்நாட்டுக்கு குடியேறுபவர்களை கண்டறிந்து தாயகம் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கூறினார்.

இந்த புதிய சட்டத்தின்கீழ், குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டும் குடியுரிமை அளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த புதிய சட்டத்தின்கீழ், பிரிட்டனில் குடியேற்றம் செய்தவர்கள் பல்கலைக்கழகங்கள், தொழில் நிறுவனங்கள், சமூக அமைப்புகளின் ஆதரவுடன் அந்நாட்டில் வசிக்க வழிவகை செய்யப்படும்.

<<<<<>>>>>>>

தெலங்கானா தலைநகர் ஹைதராபாதில் உள்ள சாலைக்கு தமது பெயரை சூட்டியதற்கு அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் இந்தியாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், டோனால்டு ட்ரம்ப் சாலை என்று பெயர் சூட்டியுள்ளதற்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஹைதராபாதில் உள்ள அமெரிக்க துணை தூதரகத்திற்கு அருகே உள்ள சாலைக்கு தெலங்கானா துணை முதலமைச்சர் திரு **Bhatti Vikramarka Mallu** டோனால்டு ட்ரம்ப் சாலை என்று பெயர் சூட்டியுள்ளார்.

அமெரிக்காவின் 250-ஆவது ஆண்டு நிறுவன நாளையொட்டி, நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

பங்களாதேஷ் நாட்டுக்கு 110 கோடி டாலர் அவசர நிதியுதவி அளிக்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

அந்நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதையடுத்து, எரிபொருள், உரம் விலை அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, உணவு பாதுகாப்பை நிலைநாட்டும் வகையில் உலக வங்கி இந்த நிதியுதவியை வழங்குகிறது.

உர இறக்குமதிக்காக 30 கோடி டாலரும், அவசர செலவினங்களுக்காக 71 கோடி டாலரும் வழங்கப்பட உள்ளது.

பங்களாதேஷில் பணவீக்க விகிதம் அதிகரித்துள்ளதையடுத்து, இந்த நிதியுதவி பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>>

ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக பக்ரைன் கூறியுள்ளது.

அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த தாக்குதலில் உயிர்சேதம் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்ரைன் மீது ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பக்ரைன் நாட்டின் இறையாண்மைக்கு எதிரான நடவடிக்கை இது என்று கூறியுள்ளது.

அமெரிக்கா, ஈரானின் தென்பகுதியில் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்க முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் கூறியிருந்தது.

<<<<<>>>>>>>

ஆப்பிரிக்காவின் **Congo** நாட்டில் **Ebola** வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து **200**-ஆக அதிகரித்துள்ளது.

இந்த தொற்றால் **321** பேர் உயிரிழந்ததாகவும் அந்நாட்டு சுகாதாரத்துறை கூறியுள்ளது.

இந்த தொற்றிலிருந்து **148** பேர் குணமடைந்ததாகவும், **419** பேர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறியுள்ளது.

**Congo** நாட்டில் மருந்துகளின் பற்றாக்குறை இருப்பதாகவும், உலக நாடுகள் உதவி அளிக்க வேண்டும் என்றும் சுகாதாரத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இதனிடையே, எபோலா தொற்று பரவிவரும் நிலையில், எச்சரிக்கையுடன் இருக்குமாறு உலக சுகாதார அமைப்பு தலைமை இயக்குநர் **Tedros Adhanom** அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இலங்கை ''ஏ'' அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா ''ஏ'' அணி இரண்டாவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி **48** ரன் எடுத்துள்ளது.

**Galle**-யில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இலங்கை ''ஏ'' அணி முதல் இன்னிங்சில் **330** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா ''ஏ'' அணி தற்போது **170** ரன் முன்னிலையில் உள்ளது.

இந்தியா ''ஏ'' அணி முதல் இன்னிங்ஸில் **6** விக்கெட் இழப்புக்கு **452** ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளில் நாளை அதிகாலை இரண்டு முப்பது மணிக்கு இங்கிலாந்து — பனாமாவையும், குரேஷியா — **Ghana**-வையும் எதிர்கொள்கின்றன.

நாளை அதிகாலை ஐந்து மணிக்கு நடைபெறும் ஆட்டங்களில் போர்ச்சுகல் — கொலம்பியாவையும், உஸ்பெகிஸ்தான் — **Congo**-வையும் எதிர்கொள்கின்றன.

--------------

**Smash** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் தகுதி சுற்று இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவின் **Yashaswini Ghorphade** வெற்றிபெற்றுள்ளார்.

-----------

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rutuja Bosale** - சீனாவின் **Fangran Tian** இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை **6-3, 6-4** என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Elena Micic — Belle Thompson** இணையை வென்றது.

-------------------

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரணவ் செந்தில்குமார் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **6-4, 6-2** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Theo Hermann**-ஐ வென்றார்.

<<<<<**END**>>>>>>